8. ஆய்வு அறிந்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல் மதிப்பீடாக அமையும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் மின்னிதழில் வெளியிடுவதற்குப் பரிந்துரைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழில் (UGC Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் மட்டுமே சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக ரூ.2000 செலுத்தவேண்டும். (ஆய்விதழில் வெளியிடுவதற்கான கட்டணம் பின்னர் பெறப்படும்).

கட்டுரை மற்றும் கட்டணம் அனுப்ப
வேண்டிய கடைசி நாள்: 18.04.2022
கடைசி நாளுக்குப் பின் வரும்
கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆய்வுக் கட்டண விவரம்
பேராசிரியர்கள் / பேராளர்கள்
/ ஆர்வலர்கள் : ரூ.300
ஆய்வு மாணவர்கள் : ரூ.200

கருத்தரங்கில் கலந்துக்கொள்ளும்
பார்வையாளர்கள் கட்டணம் ரூ.100

கட்டணத்தைச் சிவகாசி AXIS BANK-இல் மாற்றத்தக்க வகையில் Sri Kaliswari College, Sivakasi - 626 130. Virudhunagar District என்ற பெயரிலலும், A/C No: 089010100048949, IFSC Code: UTIB000089 என்ற வங்கிக்கணக்கிலும் அனுப்பலாம். வங்கிக்கணக்கில் பணம் செலுத்தியவர்கள் அதற்கான நகல் இரசீதினைக் கட்டுரையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்


கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி

**முனைவர் ஜெ.அமுதா**

தமிழியல் துறைத்தலைவர்
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 130

தொடர்புக்கு:
7639547646, 6384632150, 9442324935


கருத்தரங்கப் புரவலர்
உயர்திரு அ.பா. செல்வராசன்
செயலர்
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 130.

கருத்தரங்க இயக்குநர்
முனைவர் சீ. கிருஷ்ணமூர்த்தி
முதல்வர்
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 130.

கருத்தரங்க இணை இயக்குநர்கள்
முனைவர் பெ.கி.பாலமுருகன்
செல்வி இரா.முத்துலட்சுமி
துணை முதல்வர்கள்
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 130.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்
திருமதி சு.கோமதி அழகு
முனைவர் மு.சங்கர்
உதவிப்பேராசிரியர்கள்

கருத்தரங்க அமைப்புக்குழு செயலர்கள்
முனைவர் ச.பாரிஜாதம்
இணைப்பேராசிரியர்
முனைவர் ஜெ.அமுதா
தமிழியல் துறைத்தலைவர்
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி - 626 130

கருத்தரங்க அமைப்புக்குழு உறுப்பினர்கள்
திரு ச.செந்தில்நாதன்
திருமதி பெ.சிவசக்தி
திருமதி அ.ரூபாதேவி
திரு சு.முத்துசிதம்பரபாரதி
திரு மு.பாலகணேஷ்
திருமதி க.பொற்கொடி
திருமதி இ.மரியசெல்வி
திருமதி அ.ஏஞ்சல்ராணி
முனைவர் மு.சி.இராஜசீமா
முனைவர் இ.மாரிமகேஸ்வரி
திருமதி ஜெ.ஜமுனாராணி
உதவிப்பேராசிரியர்கள்

# ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
## சிவகாசி.

தமிழியல் துறையும்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழும்
இணைந்து நடத்தும்

# தேசியக் கருத்தரங்கம்

தலைப்பு

# இனக்குழுப் பண்பாடும் ஆய்வுமுறைகளும்

நாள்: 19.05.2022
நேரம்: 9.30 மணி - 4.00 மணி

இடம் : ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி.

# பதிவுப்படிவம்

பெயர் : ..........................................................................

பதவி : ..........................................................................

முகவரி : ..........................................................................

அலைபேசி எண் : ..........................................................

மின்னஞ்சல் : :...........................................................

கட்டுரைத் தலைப்பு : ...................................................

பதிவுக்கட்டணம் : ......................................................

வரைவோலை எண் ..................................................

வங்கியின் பெயர் : ....................................................

கையொப்பம்

(இப்படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

அன்புடையீர்,

வணக்கம். 'குட்டி ஜப்பான்' என்றழைக்கப்படும் சிவகாசி மாநகரில் வெற்றிகரமாக வளர்ந்து வரும் மிகச்சிறந்த கல்லூரிகளில் ஸ்ரீ காளீஸ்வரி ஃபயர் ஒர்க்ஸ் சார்பாக ஸ்ரீ காளீஸ்வரி அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி தனி அடையாளத்தைப் பெற்றுள்ளது. கிராமப்புற மாணவர்களும் உயர்கல்வி பெற்று வாழ்க்கையில் உயர்ந்து நாட்டையும் உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர் சிவகாசி வழித்தடத்தில் ஆனைக்குட்டம் எனுமிடத்தில் 2000 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இயங்கி வருகிறது. 16 இளங்கலைப் பட்டப்படிப்புகளும், 9 முதுகலைப் பட்டப்படிப்புகளும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 2012 ஆம் ஆண்டு முதல் தன்னாட்சி அந்தஸ்தும் பல்கலைக்கழக மானியக்குழுவின் 12(B), 2(F) அங்கீகாரமும் பெற்று தனிச் சிறப்புடன் விளங்குகிறது. நாட்டுப்பற்றும் கடின உழைப்பும் கொண்ட நல்ல திறமை வாய்ந்த இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வரும் இக்கல்லூரி புதிதாய்த் தொடங்கப்பட்ட கல்லூரிகளுள் சிறந்த கல்லூரிக்கான விருதினைப் பெற்றுள்ளது. 2002-2003 ஆம் கல்வியாண்டில் இளங்கலைத்தமிழ் பட்டப்படிப்பும் 2005-2006 ஆம் கல்வியாண்டில் முதுகலைத்தமிழ் பட்டப்படிப்பும் 2014-2015ஆம் கல்வியாண்டில் இளநிலை ஆய்வாளர் பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டு இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது.

எங்கள் துறை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் மேலாண்மைகள், பண்டைய இலக்கியப் பாத்திரங்கள், தொல்காப்பிய உரையாசிரியர்கள், பக்தி இலக்கியத்திற்குச் சங்க இலக்கியத்தின் பங்களிப்பு ஆகிய தலைப்புகளில் பயிலரங்குகளையும், கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளன. பாரதி இலக்கியச் சங்கத்துடன் இணைந்து யாதுமாகி மற்றும் மூன்றாம் மரபு ஆகிய இலக்கிய மாநாடுகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன. மேலும் சாகித்திய அகாதெமியுடன் இணைந்து இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்கள் எனும் தலைப்பிலும் திருப்பதி தேவஸ்தானத்துடன் இணைந்து திருமங்கையாழ்வார் எனும் தலைப்பிலும் தேசியக்கருத்தரங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. கதையும் கவிதையும் மற்றும் ஹைக்கூ எனும் தலைப்புகளில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியப் பொருண்மைகளும் புலப்பாட்டு நெறிகளும் எனும் தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றையும் நடத்தியுள்ளோம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சிவகாசி கந்தகப்பூக்கள் இலக்கிய அமைப்புடன் இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சிறப்புப் பொழிவுகளை நடத்தி வருகிறோம். கோவில்பட்டிக் கம்பன் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் வழங்குகிறோம். மேலும் பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள் கருத்தரங்குகள், இலக்கியக் கூட்டங்கள் நடத்தவுள்ளோம்.

இத்தகைய இலக்கியப் பணியின் தொடர்ச்சியாக எங்கள் கல்லூரியின் தமிழியல் துறையும் சர்வதேசத் தமிழ் ஆய்விதழும் இணைந்து "இனக்குழுப்பண்பாடும் ஆய்வுமுறைகளும்" எனும் பொருண்மையில் ஒருநாள் தேசியக் கருத்தரங்கு நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இனக்குழுக்களிடமிருந்தே இலக்கியங்கள் தோன்றின என்ற அடிப்படையில் இனக்குழுக்கள் சார்ந்த பண்பாடுகள் குறித்த பொருண்மையிலான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வாளர்கள் கட்டுரைகளை வழங்கிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இனக்குழு என்பது ஒரு மக்கள் குழு அல்லது கூட்டம் என்பதாகும். அந்தக் குழுவில் உள்ள மக்கள் தங்களுக்கென பொதுவான மொழி, பண்பாடு, நாகரிகம் மற்றும் மத நம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள். மேலும் அவர்கள் ஒரு பொது மரபு வழியைக் கொண்டிருப்பார்கள். மனித சமுதாயங்களைப் பற்றிய செய்திகள் புத்தாய்வாளர்களாலும் பயணிகளாலும் சமயப்-பரப்பிகளாலும் தொகுக்கப்பெற்றன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் போவாஸ் போன்றோர் நேரடியாக மக்களிடம் சென்று ஆய்வு செய்யத் தொடங்கினர். இத்தகைய இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு இன்று இனக்குழுவியல் எனத் தனியொரு ஆய்வுக்களமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இனக்குழுச் சமூகத்திலிருந்து உருவான அரசுரிமைச் சமூகம் மற்றும் குடிமக்கள் பற்றிய வாழ்வியல் பதிவுகளை இலக்கியங்களில் காணமுடிகிறது. இலக்கியங்கள் காட்டும் ஒரு தனிப்பட்ட சமூகம் மற்றும் இனம் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளை மையப்படுத்தி ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

1. குடும்ப அமைப்பு
2. திருமண முறை
3. சடங்குகள்
4. உளவியல் பாங்குகள்
5. பொருளாதாரம்
6. உணவு முறைகள்
7. தொழில்கள்
8. அரசியல் முறை
9. விழாக்கள்
10. நம்பிக்கை
11. புழங்குப் பொருட்கள்
12. வழிபாட்டு முறைகள்
13. வழக்காறுகள்
14. அழகியல் சிந்தனைகள்
15. புவிச் சூழலியல்
16. குடியிருப்பு முறை
17. விளையாட்டுக்கள்
18. இசை
19. குழந்தை வளர்ப்பு
20. அதிகார உறவுகள்
21. குடும்ப உறவுகள்
22. வாழ்க்கை முறை
23. பொருள்சார் பண்பாடு
24. விழுமியங்கள்
25. ஆடை, அணிகலன்கள்

இவை போன்ற பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் அமையலாம்

<u>கட்டுரையாளர்கள் கவனத்திற்கு.</u>

1. ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (Word Document) A4 தாளில் 1.5 இடைவெளியுடன் லதா யுனிகோடு (Latha Unicode Font) எழுத்துருவில் கணினிவழி தட்டச்சு செய்து ethnologyseminar2022@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 18.04.2022 ஆம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.
2. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டனவாக இருத்தல் வேண்டும். இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
3. கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின் பெயர், கல்லூரி / பல்கலைக்கழகம், நகரம், அஞ்சல் குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் அகியன தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கட்டாயம் இடம் பெற வேண்டும்.
4. கட்டுரைத் தலைப்பு, ஆய்வுக்சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை (துணைத் தலைப்புகளுடனும், விவாதங்களுடனும்) ஆய்வுப் பயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
5. மேற்கோள்கள் எங்கெங்கு எடுத்தாளப்படுகின்றனவோ அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர்கள் பெயர், ஆண்டு எ.கா. (சுவாமிநாதஐயர், உ.வே.1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.
6. மேற்கோள்கள் விபரங்கள் (ஆசிரியர்பெயர், (வெளிவந்த ஆண்டு), புத்தகத்தின்பெயர் (வெளிவந்த பதிப்புவரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழுமுகவரி) கட்டுரையின் இறுதியில் இடம்பெற வேண்டும் கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். (கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் தமிழில் தரலாம். ஆங்கில மொழிபெயர்ப்பு கட்டாயம் அல்ல.
7. கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் நேரில் வந்து தங்களின் ஆய்வுக் கட்டுரைகளைக் கட்டாயம் வாசித்தளிக்க வேண்டும். கருத்தரங்கில் நேரில் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறு கட்டுரையே சர்வதேசத் தமிழ் ஆய்விதழில் வெளிவரப் பரிந்துரைச் செய்யப்படும்.